முருகப்பெருமான் துணை

**மகான் பிருகுமகரிஷி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.12.2022**, திங்கட்கிழமை

1. தவபலமிக்க அரங்க மகானே
தருமனே ஞானத் தலைவனே
அவனியில் உன் பெருமை கூறி
அறிவிப்பேன் சுபகிருது சிலை திங்கள்
2. திங்களிலே லாப திகதி சோமவாரம்
**(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 11 ம் நாள் 26.12.2022, திங்கட்கிழமை)**
தேசிகனுக்கு அனுகூல ஆசிதனை
இங்கனமே பிருகுமகஷி யானும்
இயம்பிடுவேன் உலக நலம்பெற
3. நலம்தரும் அரங்க ஞானியரின்
நல்வழிகாட்டலை ஏற்று வந்து
பலம்தரும் சடாட்சர தீட்சைதனை
பழுதின்றி ஏற்றுத் தொடர
4. தொடரவே வாழ்வினில் மாற்றம்
தொய்வில்லா வளர்ச்சி நிலைகளாக
இடர்களை வெல்லும் மனபலமும்
ஏழ்மை விரட்டும் தரும குணமும் பெருகி
5. பெருகியே நல்ல சான்றோர்களாக
பேருலக மக்கள் அனைவரும்
ஆறுமுக அரங்கன் ஆசியால்
ஆற்றல் கூடியே நிலை உயர்வர்
6. உயர்வான ஞானவழிகள் எனும்
உண்மை சன்மார்க்க நெறியே
தயவை ஊட்டும் வழிகளென
தரணியோர் பற்றி வருதலுற
7. வருதலுற வையகம் எங்கிலும்
வள்ளல் தன்மை கொண்டநல்
முருகப் பெருமான் அருளாசியும்பெற்ற
முழுமை கண்ட ஞானவான்களாக
8. ஆகவே கலியிடரை வெல்லும்
ஆற்றல்மிக்க ஞானிகள் ஆகவே
வகைபட உலகை மாற்றும்
வல்லமை கொண்டவர்களாக மாறுவர்
9. மாறுதலை தரும் மாதவசியின்
மாண்புமிக்க சீர்திருத்தம்மிக்க
ஆறுமுகனார் அம்ச வடிவாக
அனைவரும் தேற்றம் காண்பர்

10. காண்கவே ஞானிகளின் ஆசிபட
கருணைமிக்க தலைமையுமாக
மேன்மை பொருந்திய ஆளுமையுமாக
மனிதர்களின் இந்த ஆட்சி முடிவுற்று

11. முடிவுற்று மகான்கள் ஆட்சி
முழுமை பெற்ற தயவுமிக்க ஆட்சியாக
நாடெங்கிலும் முருகப் பெருமானின்
ஞான ஆட்சியாக மலரும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–